# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை


இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்


MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 19/03/2022 | முதல் | 23/03/2022 |
| அறிக்கை எண் : | 022/ 2022 | வெளியீட்டு நாள் : | | 18/03/2022 | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது

| கடந்தவார வானிலை (15.03.2022 முதல் 17.03.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-03-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15/03 | 16/03 | 17/03 | | தேதி | நாள்-1 19/03 | நாள்-2 20/03 | நாள்-3 21/03 | நாள்-4 22/03 | நாள்-5 23/03 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 37 | 38 | 39 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 37 | 38 | 38 |
| 21 | 24 | 25 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 5 | 4 | 5 | | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 2 | 2 |
| 49 | 64 | 64 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 24 | 37 | 27 | | | 55 | 50 | 45 | 45 | 45 |
| 8 | 5 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| **கிழக்கு** | **வட கிழக்கு** | **கிழக்கு** | | **காற்றின் திசை** | தென்மே மேற்கு | **மேற்கு** | மேற்கு | தென்மே மேற்கு | **தென் கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 19 தேதி தூரலுக்கான வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°- 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்மேற்கு, மேற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்தது வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (18 - 24 மார்ச் 2022)

### மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சிறிதளவு கூடுதலாக மழை பெய்ய வாய்ப்பு.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிக பட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்த பட்ச வெப்ப நிலையை பொருத்த மட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**வெப்பநிலை எச்சரிக்கை:**

எதிர்வரும் 19/03/2021 மற்றும் 20/03/2021 ஆகிய தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் உயர்ந்த பட்ச வெப்பநிலையானது இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும். இதன் காரணமாக பருத்தி, எள், கத்தரி மற்றும் வெண்டை சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் வயலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மார்ச் 19 மற்றும் 20 தேதி இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின் கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வெங்காயம், தர்பூசணி, கால்நடை.**

**வெங்காயம்:**

தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் வெங்காயப் பயிரில் அடிச்சாம்பல் நோயின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் தாக்குதலால் வெள்ளை நிற அடிச்சாம்பல் வளர்ச்சி இலையின் மேற்புறத்தில் காணப்படும், முடிவில் இலைகள் காய்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 350 கிராம் என்ற அளவில் பிரோப்பினெப் மருந்தினை தண்ணீருடன கலந்து தெளிக்க வேண்டும். பின் 10 நாட்கள் கழித்து 10 லிட்டர் தண்ணீருக்கு 100 கிராம் சூடோமோனாஸ் மற்றும் 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**தர்பூசணி:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் தர்பூசணிப் பயிரில் அசுவினி பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலின் காரணமாக இளம் மற்றும் முதிர்பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சும். இதன் காரணமாக கொடிகள் வாடும், பூக்கள் வாடி தொங்கும், இதனால் கொடிகளின் வளர்ச்சியும் தடைப்படும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 கிராம் என்ற அளவில் வெர்டிசீலியம் லெக்கானி மற்றும் 10 மில்லி ஒட்டும்பசை கலந்து தெளிக்கவேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் வெப்பமான பருவச்சூழ்நிலையில் மாடுகளை பாதுகாக்க 3 பெரிய நெல்லிக்காய்களை இடித்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம், மேலும் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 1 கைபிடி அளவு வெந்தயம், 1 கைபிடி அளவு நெல்லிக்காய் வற்றல் போன்றவைகளை நன்கு ஊரவைத்து அரைத்து தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம்.